



# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## மானியக் கோரிக்கை

## எண். 52

# அறிவிப்புகள்

# 2023 - 2024

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## மானியக் கோரிக்கை
## எண். 52

அறிவிப்புகள்

2023-2024

## மு.க. ஸ்டாலின்

முதலமைச்சர்

1. மாற்றுத்திறனாளிகளுக்கு அரசால் ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு பயனாளியின் பங்கு தொகையினை செலுத்துவதற்காக வட்டியில்லா வங்கி கடனுதவி வழங்கும் திட்டத்தின் மூலம் 1,000 நபர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு அரசால் ஒதுக்கப்படும் வீடுகளுக்கு பயனாளியின் பங்கு தொகையினை செலுத்த இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிட வட்டியில்லாக் கடனுதவி கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கு தரை தளத்திலேயே வீடுகள் ஒதுக்கப்படும்.

இக்கடனுதவி அதிகபட்சமாக நபர் ஒருவருக்கு ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வரை ஐந்து வருட காலத்திற்கு மட்டும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும். இத்திட்டத்தில் அதற்கான வட்டித் தொகையினை கடன் வழங்கும் வங்கிக்கு அரசே செலுத்தும். மாநிலம் முழுவதும் வருடந்தோறும் 1,000 மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



2. உயர்கல்வி பயிலும் 1,000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தலா ரூ.14,000/- மதிப்பில் நவீன வாசிக்கும் கருவி வழங்கும் வகையில் ரூ.140.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

பார்வை மாற்றுத்திறன் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரசால் பல்வேறு நவீன உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வுபகரணங்கள் சிறப்பு பள்ளிகளில் பயிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது மேல்நிலை வகுப்பு மற்றும் அதற்கு மேல் அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் நவீன வாசிக்கும் கருவி தலா ரூ.14,000/- மதிப்பில் முதற்கட்டமாக 1,000 மாணவர்களுக்கு ரூ.140.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. ஒரு கால் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 500 பயனாளிகளுக்கு ரூ.450.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் தற்போது இரண்டு கால்களும் பாதிப்படைந்து, கைகள் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஒரு கால் மட்டுமே பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின் பயன்பாட்டினை விரிவுபடுத்தி முதற்கட்டமாக 500 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.450.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



4. உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம்,2016-னை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்கள் வாடகைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் போது, அதில் மாற்றுத்திறனாளிகளுக்கென தனியே ஐந்து சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படும் மற்றும் மொத்த அலகுகள் இருபதுக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில், குறைந்தபட்சம் ஒரு அலகு ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித் தொகையினை உயர்த்தி, கூடுதலாக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தில் சுமார் 10.11 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் உறுப்பினர்களாக பதிவு செய்து, பயன்பெற்று வருகின்றனர். ஆண்டுதோறும் ரூ.329.62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயனாளிகளுக்கும், அவர்களின் குடும்ப வாரிசுகளுக்கும் கல்வி உதவித்தொகை மற்றும் மருத்துவச் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியம் தொடங்கப்பட்ட 2007-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் உதவித்தொகையானது உயர்த்தப்படாமல், அதே தொகை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தினால் வழங்கப்படும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித் தொகைகளை உயர்த்தும் நோக்கில், கூடுதலாக ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



6. செவி மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் வாயிலாக சைகை மொழிபெயர்ப்பாளர் பயிற்சி அளிக்க ரூ.15.00 இலட்சம் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-னை முழுமையாக செயல்படுத்தும் வகையில் இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்றச் சூழலினை ஏற்படுத்தும் விதமாக, மாநிலம் முழுவதும் உள்ள 1.77 இலட்சம் செவி மாற்றுத்திறனாளிகளின் தகவல் பரிமாற்றத்தில் ஏற்படும் தடைகளைக் களைவதற்காக, சைகை மொழி பெயர்ப்பாளர்களின் எண்ணிக்கையினை உயர்த்தி, அரசால் நடத்தப்படும் கூட்டங்களில் செவி மாற்றத்திறனாளிகளுக்கும், பிறருக்கும் இடையேயான கருத்துப்பரிமாற்றத்தினை எளிதாக்க ஏதுவாக, உரிய பயிற்சி வழங்கும் பொருட்டு இந்திய மறுவாழ்வு குழுமத்தின் (Rehabilitation Council of India) அங்கீகாரம் பெற்ற, பயிற்சி நடத்த முன்வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் 100 நபர்களுக்கு பயிற்சி அளிக்க ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7. மாற்றுத்திறனாளிகளின் சேவையில் ஈடுபட்டுள்ள அரசு நிதியுதவி பெறும் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்தினை உயர்த்தி வழங்குவதற்காக ரூ.534.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் 92 ஆரம்ப பயிற்சி மையங்கள், 56 மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்கள், 70 அறிவு சார் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு இல்லங்களில் பணிபுரியும் 1,011 பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும்மதிப்பூதியத்தினை உயர்த்தி வழங்குவதற்காக ரூ.534.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ், தற்போது வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்தினை சமூகப் பணியாளருக்கு ரூ.6,000/- லிருந்து ரூ.12,000/- ஆகவும், துணைச் செவிலியருக்கு ரூ.5,500/- லிருந்து



ரூ.10,000/- ஆகவும், தொழிற்பயிற்றுநர் மற்றும் விடுதி காப்பாளருக்கு ரூ.4,000/- லிருந்து ரூ.10,000/- ஆகவும், இரவு காவலருக்கு ரூ.4,000/- லிருந்து ரூ.8,000/-ஆகவும், சமையலருக்கு ரூ.3,000/- லிருந்து ரூ.8,000/- ஆகவும், உதவி சமையலருக்கு ரூ.2,000/- லிருந்து ரூ.6,000/-ஆகவும், துப்புரவு பணியாளருக்கு ரூ.2,000/- லிருந்து ரூ.5,000/-ஆகவும் மற்றும் பராமரிப்பு உதவியாளருக்கு ரூ.1,000/- லிருந்து ரூ.4,500/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

8. அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 326 சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளைப் பராமரிக்க ஏதுவாக மாதந்தோறும் ரூ.4,500/- மதிப்பூதியத்தில் பராமரிப்பு உதவியாளர்களை நியமனம் செய்ய ரூ.176.04 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளை பராமரிக்க மாதந்தோறும் ரூ.4,500/- தொகுப்பூதியத்தில் பராமரிப்பு உதவியாளர்களை நியமனம் செய்யும் வகையில், 326 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்க ரூ.176.04 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



9. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்படும் பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்து, தங்கியுள்ள 592 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் உணவூட்டு மானியத்தினை ரூ.42/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி, ஆண்டுக்கு ரூ.124.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்படும் 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில், தொழுநோயினால் பாதிக்கப்பட்டு, குணமடைந்து 592 மாற்றுத்திறனாளிகள் உள்ளுறையாளர்களாக பயனடைந்து வருகின்றனர். அவர்களுக்கு உணவூட்டு மானியம் நாளொன்றுக்கு ரூ.42/- வழங்கப்பட்டு வரும் நிலையில் அதனை ரூ.100/- ஆக உயர்த்தி வழங்குவதற்கு ஆண்டுக்கு ரூ.124.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

10. மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் பொருட்டு "மீண்டும் இல்லம் (Home Again)" எனும் புதிய திட்டத்தினை முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் அறிமுகப்படுத்தி, ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இல்லங்கள் வீதம் பத்து இல்லங்கள் 40 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 56 மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லங்களில் மனநல சிகிச்சை மேற்கொண்டு குணமடைந்த மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்தில் ஒரு அங்கமாக ஒருங்கிணைக்க "மீண்டும் இல்லம் (Home Again)" அமைப்பது இன்றியமையாததாகும். இவ்வில்லங்களில் மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் இயல்பாக வாழ, சமுதாயத்தில் ஒருங்கிணைந்து செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



முதற்கட்டமாக, மாநிலத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு தலா இரண்டு இல்லங்கள் வீதம் பத்து இல்லங்கள் 40 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

11. மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ், அரசுத் துறைகளில் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களை ஓராண்டிற்குள் நிரப்புவதற்கு அந்தந்தத் துறைகள் மூலம் பணியிடங்களை நிர்ணயம் செய்து, சிறப்பு ஆட்சேர்ப்பு தேர்வு நடத்தப்பட்டு பணி வாய்ப்புகள் வழங்கப்படும்.

அரசுப் பணியிடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு நான்கு சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களைக் கணக்கிட்டு, அப்பணியிடங்களை நிரப்பிட ஓராண்டிற்குள் சிறப்பு ஆட்சேர்ப்பு தேர்வினை (Special Recruitment Drive) நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றி வரும் மாற்றுத் திறனாளிகளும் சிறப்பு ஆட்சேர்ப்பு தேர்வில் பங்கேற்கும் வகையில் அந்தந்தத் துறைகளின் விதிகளுக்குட்பட்டு வயது வரம்பு மற்றும் தேர்வு விதிகளை தளர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



12. மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி, 22,300 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.700.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளி மாணவர்களின் சிறப்புக் கல்வியினை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. தற்போது, வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி, ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.1,000/-னை ரூ.2,000/- ஆகவும், ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.3,000/-னை ரூ.6,000/- ஆகவும், ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.4000/-னை ரூ.8000/-ஆகவும், இளங்கலை பயிலும் மாணவர்களுக்கு ரூ.6,000/-னை ரூ.12,000/- ஆகவும், முதுகலை மற்றும் தொழிற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.7000/-னை ரூ.14,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். 22,300 மாற்றுத்திறன் மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில், ரூ.700.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

13. மனநலம் சார் மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 150 பயனாளிகள் பயன்பெறும் வகையில், நான்கு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு மூன்று இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.14.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கண்டமங்கலம் கிராமத்தில், மாவட்ட நிர்வாகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1.5 ஏக்கர் நிலத்தில், மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கான இல்லங்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென மொத்தம் 100 நபர்கள் தங்கி பயன்பெறும் வகையில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இரண்டு மறுவாழ்வு இல்லங்கள் ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், கண்ணியாக்குடி கிராமத்தில், மாவட்ட



நிர்வாகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2.5 ஏக்கர் நிலத்தில், அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

14. அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களின் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசின் நிதியுதவியுடன் உணவூட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுணவூட்டு மானியத்தினை பெறாத 192 சிறப்புப் பள்ளிகள் மற்றும் 19 ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயின்று, தினந்தோறும்



காலை வந்து மாலை வீடு திரும்பும் 10,160 குழந்தைகள் பயன்பெறும் வகையில் இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

மு.க. ஸ்டாலின்

முதலமைச்சர்